இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 179 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 26 – சனிக்கிழமை 08 பிப்ரவரி 2025 – சென்னை 52 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 179 : Thiruvalluvar Year - 2056 - Thai 26 - Saturday 08 February 2025 - Chennai 52 Pages ₹ 5.00

## ஒன்றிய பா.ஜ.க. அரசால்

# தமிழ்நாட்டிற்கு நிதியும் கிடையாது! நீதியும் கிடையாது!

## நெல்லை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**திருநெல்வேலி, பிப்.8-**

**“அடுத்த 5 ஆண்டுகளில் தென்மாவட்டங்களின் வளர்ச்சி ‘புலிப் பாய்ச்சலாக’ இருக்கும். நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் போன்ற பகுதிகளின் முகமே மாறும் அளவுக்கு முன்னேற்றமானது பிரம்மாண்டமாக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு. அது நிச்சயம் நனவாகும்!” என்றும், “ஒன்றிய பா.ஜ.க. அரசால் தமிழ்நாட்டுக்கு நிதியும் கிடையாது! நீதியும் கிடையாது” என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2025), திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

திக்கெட்டும் புகழ் பரப்பிய நெல்லைச் சீமையில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பாண்டியர் ஆட்சியாக இருந்தாலும், சோழர் ஆட்சியாக இருந்தாலும், விஜயநகர ஆட்சியாக இருந்தாலும், பிரிட்டிஷ் ஆட்சியாக இருந்தாலும், எந்த ஆட்சியாக இருந்தாலும், அதில் மிக முக்கியமான நகரமாக இருந்த ஊர் நம்முடைய திருநெல்வேலி!

இந்தியாவே அடிமைப்பட்டு நெளிந்து கொண்டு இருந்தபோது, ஆங்கிலேயருக்கு எதிராக ‘புரட்சி பூபாளம்’ பாடிய மாவீரன் காத்தப்ப பூலித்தேவன் பிறந்த மண், இந்த நெல்லை மண்! ஓராண்டு, ஈராண்டு அல்ல, 17 ஆண்டுகள் வெள்ளையருக்கு எதிராக படை நடத்திய பாளையக்காரர்தான் பூலித்தேவன்! அந்தப் பூலித்தேவனுக்கு ‘நெல்கட்டும்செவலில்’ நினைவு மண்டபம் அமைத்தவர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

### நெல்லையப்பர் கோயிலைப் புதுப்பித்து திருப்பணிகள் செய்தவர் கலைஞர்!

நெல்லையின் அடையாளங்களில் முக்கியமானது, ஏழாம் நூற்றாண்டில், “நின்றசீர் நெடுமாறப் பாண்டியரால்” கட்டப்பட்ட நெல்லையப்பர் கோயில். இப்படி பாரம்பரியம் மிக்க கோயிலை, 700 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பித்து, திருப்பணிகள் செய்தவர் நம்முடைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2025) திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில் 75,151 பயனாளிகளுக்கு 167 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பால்வளத்தறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் செ. ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் .மு.அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், நயினார் நாகேந்திரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் டாக்டர் என்.ஓ. சுகபுத்ரா, நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் ஆனந்த், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதேபோல, நம்முடைய ஆட்சியில்தான் நெல்லையப்பர் கோயிலில் பூட்டிக்கிடந்த மேற்கு, வடக்கு, தெற்கு வாசல்கள் திறக்கப்பட்டது. அதேபோல, வரும் நவம்பருக்குள் கோயிலின் வெள்ளித்தேர் ஓடும்.

### தமிழ்நாட்டின் வரலாற்றுப் பெருமை – நெல்லை மண்தான் காரணம்!

தலைநகர் சென்னை மையப்பகுதியில், அண்ணா மேம்பாலம் அமைத்தது போன்று, நெல்லையில் 1973ஆம் ஆண்டு ஈரடுக்குப் பாலம் அமைத்து, அதற்கு ‘திருவள்ளுவர் பாலம்’ என்று பெயர் சூட்டியவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்! செல்லப்பாண்டியன் பெயரிலான பாலமும் கழக ஆட்சியில்தான் அமைக்கப்பட்டது.

**1965ஆம் ஆண்டு தமிழ்மொழி காக்க மாபெரும் போர் தமிழ்நாட்டில் நடந்தபோது, அதைத் தூண்டியதாக ‘தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்’கீழ் கைது செய்யப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை சிறையில்தான் அடைக்கப்பட்டார். அதற்கு அடுத்த தேர்தலில் தி.மு.க. ஜார்ஜ் கோட்டையைப் பிடித்தது என்பது வரலாறு! தமிழரின் வரலாற்றுப் பெருமைக்கும் இந்த நெல்லை மண்தான் அடையாளம்!**

தமிழர்களின் தொன்மையை நிலைநாட்டி வரும் அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அதை மெய்ப்பிக்கும் ஆய்வுகளை தமிழ்நாடு தொல்லியல் துறை மூலமாக நாம் தொடர்ச்சியாகச் செய்துகொண்டு வருகிறோம். அந்த ஆய்வுகள் பல்வேறு திருப்புமுனைகளை உருவாக்கி வருகிறது.

தமிழ்நாட்டில் நகர நாகரிகமும், எழுத்தறிவும் கி.மு. 6ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது என்று கீழடி அகழாய்வு முடிவுகள் மூலமாக நிறுவியிருக்கிறோம்.

இரும்பின் தொன்மையானது 5300 ஆண்டுகள் என்று சில வாரங்களுக்கு முன்பு நாம் உலகத்திற்கு அறிவித்தோம்.

### மாநாடு போன்ற விழா ஏற்பாடுகள்! அமைச்சர் நேருவுக்கு வாழ்த்துகள்!

இந்த மாவட்டத்தில் பொருநை ஆற்றங்கரையில் 3200 ஆண்டுகளுக்கு முன்பே வேளாண் பயிர்த்தொழிலில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது என்று சிவகளை அகழாய்வு முடிவில் வெளிப்படுத்தி இருக்கிறோம். பொருநை அருங்காட்சியகப் பணிகளும் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. வரும் ஏப்ரல் மாதத்திற்குள், பணிகள் முடிவு பெற இருக்கிறது. இப்படி தமிழர்களின் வரலாற்றுப் பெருமைக்கு அடையாளமாகவும், வரலாற்றுத் தொன்மையும், வீரமும், மிகுந்த நெல்லை மாவட்டத்தில் இந்த அரசு விழா இன்று எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே வந்து அமர்ந்தவுடன் நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள், “என்னப்பா, இது மாநாடு போல் இருக்கிறது” என்று சொன்னார்; அந்த அளவிற்கு இந்த விழாவை பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் - இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சேலத்தைச் சீர்செய்த அமைச்சர் நேரு - நெல்லையை நேர் செய்துள்ளார்!



**அமைச்சர் நேரு அவர்களைப் பொறுத்தவரைக்கும், எதையும் பிரமாண்டமாக நடத்தித்தான் அவருக்குப் பழக்கம். சிறியதாக எல்லாம் அவருக்கு நடத்த தெரியாது; வராது. அதேபோல், அனைத்து மாவட்டங்களையும் தன்னுடைய சொந்த மாவட்டங்களாக நினைக்கும் பரந்த உள்ளம் கொண்டவர் அமைச்சர் நேரு அவர்கள். திருச்சி மண்டலத்தை வளர்த்தெடுத்த அமைச்சர் நேருவுக்கு முதலில் சேலம் மாவட்டப் பொறுப்பை வழங்கினோம். சேலத்தைச் சீர் செய்தார்! அடுத்து, நெல்லையை வழங்கினேன். நெல்லையை நேர் செய்துள்ளார் நேரு! ஏராளமான திட்டங்களை உருவாக்கி, அதற்கான நிதிகளையும் பெற்று உரிய காலத்துக்கு முன்னதாக திட்டங்களையும் முடித்துக் காட்டி நெல்லை மாவட்டத்தை சீர்மிகு நெல்லையாக மாற்றிக்கொண்டு வரும் அமைச்சர் நேரு அவர்களுக்கும் இந்த மாவட்ட நிர்வாகத்துக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களும்! வாழ்த்துகளும்!**

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

### தமிழ்நாடு அரசின் மசோதா குறித்த முடிவை குடியரசுத் தலைவர் எப்போது அறிவிப்பார்?

## மசோதாக்களை கிடப்பில் போட்டு, மாநில அரசுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது!

### ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு - உச்சநீதிமன்றம் இடித்துரை!

**புதுடெல்லி, பிப்.8-**

**மசோதாக்களை கிடப்பில் போட்டு, மாநில அரசுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்று ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் மசோதா குறித்த முடிவை குடியரசுத் தலைவர் எப்போது அறிவிப்பார் என்றும் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.**

ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், 3வது நாளாக நேற்றும் விசாரணை நடைபெற்றது. ஒன்றிய அரசின் வழக்கறிஞர் வாதத்தைத் தொடங்கிய நிலையில், ஆளுநர் தரப்பு பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்தார். அரசியலமைப்பு தொடர்பான வாதங்களை முன்வைக்க நீதிபதிகள் ஒன்றிய அரசின் வழக்கறிஞருக்கு ஆலோசனை வழங்கினர்.

தொடர்ந்து பேசிய நீதிபதிகள், மசோதாக்கள் மீது ஒப்புதல் வழங்காமல் நிறுத்திவைத்தால் அதற்கான காரணத்தை மாநில அரசுக்குத் தெரிவிக்காமல் இருந்தால் மாநில அரசுக்கு எப்படி தெரியும்? என்று கேள்வி எழுப்பினர்.

மசோதாக்கள் மீது முடிவு எதுவும் எடுக்காமல் நிறுத்தி வைத்தால் அடுத்து என்ன நடவடிக்கை? என்று வினவிய நீதிபதிகள், மசோதாவை நிறுத்தி வைப்பது குறித்து அரசியல் சாசனம் 200 எதையும் கூறவில்லை. அப்படியானால் அடுத்த நிலை என்ன? என்றும் கேள்வி எழுப்பினர்.

பல்கலைக்கழக மசோதா ஒன்றிய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்த நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்? மசோதாக்களை கிடப்பில் போட்டு, மாநில அரசுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என்றும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு உச்சநீதி மன்ற நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

மேலும், ஒரு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்போது குறிப்பு ஏதும் இல்லாமல் அனுப்புவது ஏன் என்று வினவிய நீதிபதிகள், மசோதாவை நிராகரிக்க ஆளுநர் காரணம் தெரிக்க வேண்டும் என்று கண்டிப்புடன் தெரிவித்தனர். குறிப்பு ஏதும் அனுப்பத் தேவையில்லை என்ற ஒன்றிய அரசு வழக்கறிஞரின் வாதத்தை ஏற்க மறுத்துவிட்டனர்.

நாட்டின் குடியரசுத் தலைவர், அவராகவே ஆளுநரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாரா?, தமிழ்நாடு அரசின் மசோதா விவகாரத்தில், குடியரசுத் தலைவர் எப்போது முடிவை அறிவிப்பார்? என்றும் ஒன்றிய அரசுக்கு சரமாரி கேள்விகளை நீதிபதிகள் எழுப்பினர். இதையடுத்து, வழக்கு விசாரணை வரும் 10ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

### மீனவர்கள் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும்!

## இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, பிப்.8-

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.



டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா, தி.மு.க. மக்களவை கொறடா ஆ.ராசா உள்பட தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பினர்.

### நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்!

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் பிரச்சனைக்கு, ஒன்றிய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் உரையாற்றிய கனிமொழி எம்.பி., தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு, கைது செய்யப்படுவது வன்மையாக கண்டிக்கக் தக்கது என்றும், கடந்த ஆண்டு மட்டும் இலங்கை கடற்படையினரால் 530 தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் பிரச்சனைக்கு, ஒன்றிய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.